மில்க்வைற் செய்தி
Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஆனி 1982 ★ இதழ் - 78

# முத்திரை வெளியீடுகள்

வீரர்களின் நினைவாகக் கல் நடுதல் பழந் தமிழ் நாகரிகம். கல்லில் வீரர் தம் பெயரும் வீரச் செயல்களும் பொறிக்கப் பெறுதலும் உண்டு. என்ஐ முன் நில்லன் மின், முன்னின்று கல் நின்றவர் பலர் என்பது வீரர்களின் நடுகல்லைக் குறிக்கும் செய்யுளடியாகும். ஐ என்பது தலைவனைக் குறிக்கும் ஓரெழுத்துச் சொல்.

கல் நடும் வழக்கம் சிலை எடுக்கும் நாகரிகமாக வளர்ந்துள்ளது எனலாம். சிலையிலும் சித்திரத்திலும் வீரரை நினைவு கொள்ளும் வகையில் இன்று முத்திரைகளிற் பொறித்து நாடு முழுவதும் ஏன் உலகமெங்கும் அறியச்செய்வது பெரு வழக்கில் நிலவுகிறது.

இந்தவகையில் எங்கள் இலங்கைப் பெரியார்கள், வீரர்கள், தேசிய வீரர்கள் வரிசையில் தமிழ்ப் பெருமக்கள் பலர் முத்திரையில் உலா வந்துள்ளார்கள்; ஆறுமுகநாவலர், இராமநாதன், அருணாசலம், ஆனந்தக்குமாரசுவாமி முதலானோர் வரிசையில் இன்று சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்களுக்கு முத்திரை வெளியிடப் போவது மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியாகும்.


சேர். துரைசுவாமி அவர்கள் புகழ்பூத்த சைவத் தமிழ்க் குடும்பத்தில் தோன்றி, கற்கத்தாவில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளில் பாண்டித்தியமுற்று இலங்கைக்கு மீண்டு, சட்டம் பயின்று சட்டத்தரணியாகி, சேர். இராமநாதன் அவர்கள் வழியில் அரசியலில் ஈடுபட்டு 1921 ஆம் ஆண்டு முதலாக 1930 ஆம் ஆண்டுவரை சட்டசபையில் சைவப் பொலிவோடு கொலுவீற்றிருந்து மகத்தான பணி புரிந்தவர்.

சட்டசபையில் தேசாதிபதிக்கு அடுத்தபடியாக அதிகாரத்திலிருந்த குடியேற்றக் காரியதரிசியோடு நெருங்கிப் பழகி, வடமாநிலம் முழுவதிலும் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் உதயமாவதற்குச் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்து சுப்பிரமணியர் இராசரத்தினம் அவர்களுக்கு உதவிபுரிந்தவர்.

பின்னர் 1931ஆம் ஆண்டில் சட்டசபை அரசாங்க சபையென மாற்றியமைக்கப்பட்ட காலத்தில் அதன் யாப்பினைத் தயாரித்த டொனமூர்த் திட்டத்தை மறுத்து ஒன்றியொதுக்கல் என்னும் பகிஸ்காரஞ் செய்த துரைசுவாமி அவர்கள் 1936ஆம் ஆண்டில் அரசாங்க சபைப் பிரதிநிதியாகத் தெரியப் பெற்று 1947ஆம் ஆண்டுவரை சபையின் சபாநாயகராகக் கொலு வீற்றிருந்தார்.

தென்னிலங்கையில் மொலமுரே ஒற்றுமைப் பாலத்தை அமைத்து வடக்கு நோக்கி வந்தமைபோல வடவிலங்கை

(12-ம் பக்கம் பார்க்க)



புனரமைக்கப்பட்ட யாழ். பொதுஜன நூல் நிலையத்துக்கு முதலாவது புத்தக அன்பளிப்பை தொழிலதிபர் திரு. க. கனகராசா அவர்கள் யாழ் மாநகர முதல்வரிடம் கையளிக்கிறார்.

உ
சிவமயம்






## திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்

### பாவநாசத் திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்குும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கு மீச னெனுதவர்க் கில்லையே.

திருச்சிற்றம்பலம்

புண்ணிய தீர்த்தங்கள் என்று புகழ்பெற்றுள்ள புனித நீர்ப்பெருக்குகளான கங்கை, காவிரி, குமரி, இன்னும் பலவாய கடற்கரைகளின் துறைகள் ஆகிய இடங்களில் நீராடுவதால் பழியும் பாவமும் போய்விடமாட்டா. ஆனுல் நீராடும்போது இறைவன் ஒருவன் இருக்கிறுர், அவர் எங்கும் வியாபகமாய் எழுந்தருளியுள்ளார், அவர் புனித நீர்த்துறைகளில் செழுநீர்த் துளியாய் எழுந்தருளியுள்ளார், அவர் திருவருளாய அந்நீரிலேயே நாம் தோய்கிறேம் என்று மனங்கொண்டு நீராடினுல் பழி பாவங்கள் நீங்கும் புண்ணியப் பேறு உண்டாகும்.




## இனியவை கூறல்

சொல்லாலும் பொருளாலும் இனியவாகுஞ் சொற்களைச் சொல்லுதல்.

முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானும்
இன்சொ லினதே அறம்.

இரவலரைக் கண்டபொழுதே முகத்தால் விரும்பி, இனிதாக நோக்கி, பின் நெருங்கிவந்தபோது மனமார்ந்த இனிய சொற்களைச் சொல்லுமிடத்தேதான் மெய்யறம் விளங்கும்.

### On Speakling Sweetly

To welcome one with Countenance, to look with kindness and to speak sweet words coming from the heart is righteousness indeed.

## 1982 யூன் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 2 | புதன் | — | ஏகாதசி விரதம் |
| 3 | வியாழன் | — | திருக்கேதீஸ்வரம் தேர் |
| 4 | வெள்ளி | — | பிரதோஷ விரதம்<br>வைகாசி விசாகம் |
| 6 | ஞாயிறு | — | பூரணை விரதம் |
| 7 | திங்கள் | — | வற்ருப்பழை பொங்கல் |
| 8 | செவ்வாய் | — | திருஞானசம்பந்தர் குருபூசை |
| 12 | சனி | — | வீரமாகாளி கொடி<br>பசுபதீஸ்வரர் கொடி |
| 17 | வியாழன் | — | ஏகாதசி விரதம் |
| 19 | சனி | — | பிரதோஷ விரதம்<br>கார்த்திகை விரதம் |
| 21 | திங்கள் | — | அமாவாசை விரதம்<br>ஒட்டுசுட்டான் கொடி |
| 22 | செவ்வாய் | — | நயினை நாகபூஷணி கொடி |
| 25 | வெள்ளி | — | மாணிக்கவாசகர் குருபூசை |
| 26 | சனி | — | மாவிட்டபுரம் கொடி |
| 28 | திங்கள் | — | ஆனி உத்தர தரிசனம் |

## இசைப் போட்டியில் மில்க்வைற் தொழிலதிபரின் பிரதான பங்களிப்பு

வடமாநில கல்வித் திணைக்களம் வட்டார ரீதியாக நடத்திய தேவாரம், திருவாசகம், திருப்புகழ் இசைப் போட்டியில், கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என வகுக்கப்பெற்ற பிரிவுகள் தோறும் வெற்றியீட்டிய ஆண் பெண் இருபாலாருக்கும் விலையுயர்ந்த பரிசுகள் வழங்கிய மில்க்வைற் தொழிலதிபர், குமிழ்த் தாளங்கள் வழங்கிப் பண்ணிசை வளர்ச்சிக்கும் வழிவகுத்துப் பாராட்டி ஊக்கப்படுத்தினுர். தொழிலதிபரின் பரந்த மனப்பான்மையையும் வியாபகமான சமய சமூக தமிழ்த் தொண்டினையும் பிரதம கல்வியதிகாரி திரு. வெ. சபாநாயகம் அவர்கள் பாராட்டிப்பேசி நன்றி தெரிவித்தார். இத்தகைய போட்டி ஒன்றைப் பரவலாக நடத்துவதற்கு நினைவு கொண்டு வழிவகுத்து வெற்றிகண்ட கல்விப்பணிப் பாளர் உயர்திரு சிவநாதன் அவர்களின் ஊக்கமும் ஒத்துழைப்பும் உளங்கொள்ள வேண்டிய நற்பண்புகளாகும். இத்தகைய போட்டி ஆண்டுதோறும் நடைபெறத் திருவருள் கிட்டுவதாக.

★ வேற்றுமைக்கு முதற்காரணம் அறியாமை ★

# திருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



சைவ சமயத்தவரின் அறுபத்துமூவர் நாயன்மார்களுள் நடு நாயகமாக வந்தவதரித்தவர் திருஞானசம்பந்தப் பெருந்தகையார். அவருக்கு முன்னரும் சில நாயன்மார்கள் தோன்றிச் சைவம் வளர்த்தார்கள், அவருக்குப் பின்னரும் சில நாயன்மார் தோன்றிச் சைவம் வளர்த்தார்கள், அவர் காலத்திலும் சில நாயன்மார் தோன்றிச் சைவம் வளர்த்தார்கள்.

சைவ நாயன்மார் வரிசையில் ஏற்றத்தாழ்வு இல்லை. அவர்கள் எல்லோரும் ஒருதரத்தவர். எல்லோரும் திருத்தொண்டர்கள். எல்லோரும் நாயன்மார்கள், எல்லோரும் சிவனடியார்கள். இந்தவரிசையில் வந்த திருக்கூட்டத்தவர்களுள் திருஞானசம்பந்தப் பெருந்தகை நாயகமணிபோல மைந்துள்ளார்.

திருஞானசம்பந்தப் பெருந்தகை வேதநெறிதழைத்தோங்கவும், சைவ சமயத்துறை நன்ருக ஒளிவிட்டுப் பிரகாசிக்கவும், பூத பரம்பரையினரான பூவுலகமக்கள் சிவ வழிபாட்டில் சிறந்து விளங்கவும், செந்தமிழ் வழக்குச் சிறந்தோங்கவும், சிறந்த தேவாரத்திருப்பதிகங்கள் பாடியருளவும் வந்து தோன்றியவர்கள்.

''ஆறதேறுஞ் சடையானருள் மேவ அவனியர்க்கு வீறதேறுந் தமிழால் வழிகண்டவன்'' என்று திருஞானசம்பந்தப் பெருமானை நம்பியாண்டார் நம்பிகள் போற்றுகின்ருர். சிவபெருமானின் திருவருளைப் பெற்று, உலகத்தவருக்குத் தேவாரத் திருப்பதிகங்களைப் பாடியுதவினுர் அவர்.

தமிழ் மொழிக்கே சிறப்பாயுள்ள இசையும் அந்த இசை நயத்தைப் பாலிக்கும் பண்ணும் திருஞானசம்பந்தப் பெரியாரால் புத்துயிர்பெற்றன. கண்ணின் பயன்பெருகொளி என்ருற்போல, விண்ணின் பயன் பெருமழை என்ருற்போல பண்ணின் பயன் இன்சுவை எனக் கண்டவர் தமிழர். திருஞானசம்பந்தரைக் கானத்தின் எழுபிறப்பு என்பர்.

எங்கும் சிவமயம், எல்லாம் சிவமயம் எனக்கண்டிருந்த தமிழர் வாழ்வில் ஒரு மறைப்புக்காலம் உண்டாகிக் கிரகணம்போல நிலவியபோது, அதனை நீக்கி எங்கும் அதாவது உலகில் சேதன அசேதன பொருள்களில் எல்லாம் சிவம்பெருக்கியவர் திருஞானசம்பந்தப் பெரியார்.

அவர் சிவநெறியையன்றி வேருெரு நெறியை மதிக்க மாட்டேன் என்று உறுதியாகப் பாடினவர். சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று துணிந்து, உலகம் யாவையும் உண்டாக்கிக் காத்து அழித்துத் தான் என்றும் அழியாமல் நிலவுபவர் சிவபெருமானே என்று பாடும் வகையில் அவருக்குச் சிவஞானசம்பந்தம் உண்டானது. அவர் ஞானமுண்ட பிள்ளை, ஆளுடையபிள்ளை, ஞானக்குழவி, ஞானக்கொழுந்து.

மதுரையையடுத்த பிரதேசங்களிற் குடியேறிய சமணர் இருண்ட மேகம்போலத் திருவாலவாய்த் திருப்பதியையும் சைவ சமயத்தையும் மறைத்து வாழ்ந்தபோது, திருஞானசம்பந்தப்பெருமான் இருளையோட்டும் பன்னிருசூரியர்களைப்போலப் பன்னிரு பாடல்களைக்கொண்ட திருப்பாசுரம் என்னும் பதிகத்தைப் பாடியருளினுர்.

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனும் ஓங்குக எனத் தொடங்கும் திருப்பாசுரத்தின் மகிமையைச் சேக்கிழார் சுவாமிகள் 23 பாடல்களில் விளக்கியுள்ளார். திருப்பாசுரத்தை அருணந்தி சிவாசாரியர் மெய்ஞ்ஞானம் எனப் பாராட்டுவர்.

முதுகிற் கூனுள்ளவனுய் முன்னர் கூன் பாண்டியன் என வழங்கிய பாண்டிய மன்னன் திருஞானசம்பந்தப் பெருமான் வேந்தனும் ஓங்குக என்றருளிய அளவில் கூன் நிமிரப் பெற்று நெடியவனுகி நெடுமாற நாயனுராயினுர்.

## சித்திரத் திறமை


தமிழ் நாகரிகத்தின் கலைகளுள் சித்திரம், ஓவியம், சிற்பம் முதலியன நுண்கலைகள் எனப் புகழ்பெற்றவை. சித்திரமும் கைப்பழக்கம் என்று ஒளவையார் சிறப்பித்துள்ளார். கண்கவர் ஓவியம் என்று சுவர்ச் சித்திரத்தை ஒருவர் புகழ்ந்துள்ளார். சுவரோவியத்தோடு துணிகளில் மூவர்ண ஓவியந் தீட்டியவர்கள், துணிகளுக்கு முகப்பு, கரைச் சித்திரம் தீட்டியவர்கள், திருக்கோயில் திரைச்சீலைச் சித்திரம் வரைந்தோர் பெரும்புகழ் பெற்ற நாடு யாழ்ப்பாணம்.

பாடசாலைகள் தோறும் சித்திர ஆசிரியர்கள் அருமையாகச் சித்திரக் கலையை வளர்த்து வருகிருர்கள். அவர்களுள் ஒருவர் எஸ். நடராசா என்பவர். மிக அமைதியாக ஒதுங்கியிருந்து ஓவியம் வரையும் சிந்தனையாளர். பாடசாலையிலிருந்து ஓய்வு எடுத்தபின் தமது கைவந்த கலையை மேலும் அபிவிருத்தி செய்துவருகின்ற வேளையில் அரசாங்கம் நடத்திய ஐம்பதாண்டு வாக்குரிமை, அதிக உணவு பயிரிடுதல் முதலிய சுவரொட்டிப் போட்டிகளுக்கும் சித்திரங்கள் அனுப்பிப் பரிசும், ஆறுதற் பரிசும் பணப் பரிசும் பெற்ற இவர், அண்மையில் தமது முருக பக்தியை வெளிக்காட்டும் சித்திரங்களும் வரைந்துள்ளார்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கோபுரஞ் சூழ்ந்த முகப்பினையும், அங்கே உருண்டோடும் அழகிய தேரினையும் ஆயிரக்கணக்கான அடியவர்கள் உருக்கமாக வழிபடும் அற்புதக் காட்சியையும் அருமையாக வரைந்துபுளக் செய்து பிரதிகளை விநியோகித்து வருகிருர். ஒவ்வொரு வீட்டிலும் சுவரிற் தொங்க வேண்டிய படங்களில் இதுவும் ஒன்று.

இன்னுமொன்று அண்மையில் முருகப் பெருமானின் திருக்கைவேலை நீல நிறப் பின்னணியில் ஒலி காலும் வகையில் வரைந்து முருகன் திருக்கரமொன்றில் அதனைத் தோன்ருத் துணையாக ஏந்திநிற்ப மற்றைத் திருக்கை அபயமளிப்ப அதைச்சூழ ''வேல் பிடித்த கையா வருக வருக'' என்னும் மதுரவாசகம் ஒளிவிடுகிறது. இவற்றுக்கிடையில் முருகப்பெருமானின் மயில் இதோ வேல் என விளம்பும் வகையில் தலை நீட்டுகிறது. பக்திரசம் ததும்பும் இத்தகைய சித்திரங்கள் வரையும் திரு. நடராசா அவர்களின் கைத்திறனும் கற்பனையும் வாழ்க!

★ சமய அனுட்டானங்கள் பழக்கத்துக்குரியன ★



## பஞ்சதந்திரம்

அறத்தின் முதற் கோட்பாடு அஹிம்சை. எனவே நாம் எல்லோரிடமும் இதமாக நடந்துகொள்ள வேண்டும்.

மரத்தை வெட்டுபவனும் பசுக்களைக் கொல்லுகிறவனும், ஆயுதம் ஏந்தி இரத்தங் கொட்டச் செய்கிறவனும் அனுபவிக்கப் போகிறதை எல்லோரும் நன்கறிவர். அவர்களுக்கு நரகத்தில் நிரந்தரமான இடம் வகுக்கப்பட்டுள்ளது.

கர்வத்தாலோ, பேராசையாலோ, கோபத்தாலோ, பயத்தாலோ, நியாயத்துக்கு மாறாக நடப்பவனுக்கு நிரந்தர நரகம் உண்டு.

ஒரு பசுவுக்குத் தீங்கு செய்தல் பத்துப் பேருக்குத் தீங்கு செய்தமைக்குச் சமம். ஒன்றுமறியாத நற்குண வாட்டியான பெண்ணுக்குச் செய்யும் தீங்கு நூறு பேருக்குச் செய்த தீங்குக்கு நிகர்.

சமய சந்தர்ப்பம் அறியாத பேச்சு, தகுதியற்ற பேச்சு, கொடூரமான பேச்சு, வெறுப்பான பேச்சு, காரணமில்லாத பேச்சு, மற்றவரை வானளாவப் புகழ்ந்து தேவையில்லாமல் பேசுகிற பேச்சு எல்லாம் விஷமாகவும் முடியலாம். அவை இலக்கு மண்ணுண பேச்சு, இலக்கில்லாத பேச்சு மண்ணுய்ப் போன பேச்சு.

## சட்டியப்த பூர்த்தி

பெரியார் முருககுரியன் அவர்களின் சட்டியப்த பூர்த்தி விழா நல்லையாதீனத்தில் 22-5-82 சனிக்கிழமை நடைபெற்ற போது தொழிலதிபர் கனகராசா அவர்களை ஆசீர்வதித்துக் கௌரவித்தார்.

## மெய்வல்லுநர் போட்டி 1982

மானிப்பாய் சென் ஆன்ஸ் பாடசாலை இல்ல மெய் வல்லுநர் போட்டி விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட தொழிலதிபர் கனகராசா அவர்கள் உடலுறுதிக்கு யோகாசனப் பயிற்சி சிறந்த வழி எனக் கூறினர்.

## ஸ்ரீலஸ்ரீ மயான யோகியார் வாழ்த்து

மதுரையில் தெற்கு வெளி வீதியில் பக்த சபை நிறுவிப் பரிபாலனஞ் செய்யும் யோகியார் தொழிலதிபர் கனகராசா அவர்களுக்கு வாழ்வில் உயர்வு, குடும்ப உயர்வு, வியாபாரபலிதம், உடல் நலம் முதலியன உண்டாக வாழ்த்தி இவரைத் தம் சபையில் நடைபெறும் விழாவுக்கு வரும்படி அழைத்துள்ளார். அவருக்கு நன்றியும் ஆசியும் உரியனவாகுக.

## காசி நகரின் பழைய சுவாமி ஒருவர்

சென்ற நூற்றுண்டில் காசி நகரில் ஒரு முதிய சுவாமி இருந்தார். அவரை ஸ்ரீ இராமகிருஷ்ண பரம ஹம்சரும் வணங்கினர் என்பர். நீண்ட காலம் மௌனமாக இருப்பதோடு அன்னகாரம் நீராகாரம் இல்லாமலும் அவர் தியானத்தில் ஈடுபடுவது உண்டு.

தியான முடிவில் அன்பர்கள் கொடுக்கும் பாலை அவர் விநயத்தோடு பெற்றுப் பருகுவர். ஒரு முறை வம்பன் ஒருவன் சுவாமியிடம் சுவருக்கு வெள்ளையடிப்பதற்குக் கலந்த சுண்ணும்புக் கலவையை வைத்தான். சுவாமிகள் புன்முறுவலோடு அதனை மடமடவென்று பருகினர்.

சுவாமி பால் என்று நினைத்துப் பருகினர் என்று நினைத்துக்கொண்டு நின்ற வம்பனின் வயிறெல்லாம் எரிந்தது. துடித்துத் துடித்துக் கதறிச் சுவாமியின் காலடியில் வீழ்ந்து மன்னிப்புக் கோரினன்.

சுவாமிகள் மௌனம் கலைந்து, ''அன்பனே நீ இறைவன் எங்கும் இருக்கிறுர் என்பதை மறந்தாய். நீ என்னில் வேருனவன் என்பதை மறந்தாய். என் வயிற்றில் இறைவன் இருக்கிறுன் என்பதை நினைக்கவில்லை சரி நீ போ'' என்றுர். அவனுக்குப் பூரண சுகம் உண்டானது. நல்லவனுனன்.

## டைக் துரை

சென்ற நூற்றுண்டில் யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராயிருந்த பேர்சிவல் அக்லந் டைக் என்னும் பெரியாரை நம்மவர் யாழ்ப்பாணத்து இராசா என்றே அன்பாக அழைத்து மரியாதை செய்தார்கள். டைக் துரை, ஆறுமுகநாவலரவர்கள் தோன்றிய ஆண்டான 1822இல் வைகாசி மாதத்துப் பதினைந்தாம் திகதி இலங்கையில் உத்தியோகமேற்ற போது, அவருக்குப் பதினேழு வயதென்பர். அவர் கப்பற் படையில் உத்தியோகம் வகித்தவர். அவர் 1824ஆம் ஆண்டில் உதவி அதிபராக யாழ்ப்பாணத்திற்கு வந்து வடமாகாணம் முழுவதையும் நன்கறிந்தார். அவரின் நேர்மையான கடும் உழைப்புக் காரணமாக அவர் சிலகாலம் பிஸ்கால் வேலையோடு பொலீஸ் நீதவானுயும் கடமையாற்றினர். சில காலம் கிழக்குமாகாண அரசாங்க அதிபராகித் திருகோணமலையில் வேலைபார்த்தார். பின்னர் 1829ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திற்கு மீண்டு, மரணபரியந்தம் யாழ்ப்பாணத்திலேயே அரசாங்க அதிபராயிருந்தார். அவருக்கு இராணி மாளிகையிலும், சட்டசபையிலும் பெரிய உத்தியோக அழைப்பு வந்தபோதெல்லாம் அவற்றை மறுத்து யாழ்ப்பாணத்தாரின் மதிப்பைப் பெற்று இங்கேயே சேவை செய்தார். அவர் 1867ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் வரை சேவை செய்தார் என்பர்.

★ மனத்துக்கு ஊட்ட வேண்டிய உணவே கல்வி ★

யாழ்ப்பாணத்து மலர்களையும் கனிகளையும் வெகுவாக விரும்பிய டைக் துரை பழைய பூங்காவில் மலர்ச் செடிகளையும் கனி மரங்களையும் அதிகமாக நாட்டிப் பொதுமக்களுக்கும் பயன்படச் செய்தார். தமது உபகரிப்பையே மூலதனமாகக் கொண்டு ஆபத்துக்குதவி வைத்தியசாலையை நிறுவிப் பரிபாலித்து வந்தார். அக்காலத்தில் அம்மையன், கரியன், ஆட்குத்திநாகன், பாளை வெட்டிக்கந்தன் எனப் பெயர் பெற்ற கொள்ளைக் கூட்டத்தாரை எதிர்த்து மடக்கிப் பிடித்து அடைத்துப் பொதுமக்களுக்கு அச்சந் தணித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று பிரபல சந்தைகள் என நிலவும் பெரியகடை, சங்கானை, சுன்னாகம், அச்சுவேலி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, முதலிய ஏழு பெரிய சந்தைகளை அமைத்ததோடு; அங்கெல்லாம் பாரிய நிழல் மரங்களையும் நிரைநிரையாக நாட்டி வளர்த்தார். யாழ்ப்பாணத்து நெடுஞ்சாலையோரங்களில் நிரையாக அண்மைக் காலம் வரை நின்று பசுமை செய்த பாரிய பூவரச மரங்களும் அந்தப் புண்ணியவான் நாட்டியவைகளேயாம்.

இப்பெரியார் 1867ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் எட்டாம் நாள் இயற்கையெய்தியதும் நான்கு நாட்கள் யாழ்ப்பாணம் எங்கும் துக்கம் நிலவியதால் வேலைத்தளங்கள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. இவரின் பூதவுடல் சுண்டிக்குளியிடுகாட்டிற் சேமிக்கப்பட்டது. இவர் நினைவாக வீதிகளிற் பாரிய நிழல் தருமரங்களும், கச்சேரியில் நீர் சேமிக்கும் தொட்டிகளும் சில கட்டடங்களும் எஞ்சி நிற்கின்றன.

யாழ்ப்பாணத்தில் வீதியோரங்களில் மிகப்பெரிய மலைவேம்புகள் யாவும் டைக் துரையின் எச்சங்களே. எச்சம் என்றால் ஒருவருக்குப்பின் அவர் புகழைக் கூறி எஞ்சி நிற்பதாகும். சிலர் மக்கள் மாத்திரம் எச்சம் என வரையறுப்பது தவறு. ஒருவர் பொதுசன உபயோகத்துக்காக உபகரித்தவை மிக மேலான எச்சமாகும். டைக் துரையை மனத்தில் கொண்டு மரம் நடுவோமாக.

---

## எள்

தமிழன் கண்ட தானிய வகைகளுள் எள் மிக முக்கியமானது. தமிழ் நாகரிகத்தோடு எள் கொண்டுள்ள உறவு வேறெந்தத் தானியமும் கொள்ளவில்லை. தமிழனைப் பார்த்தறிவதற்கு முற்காலத்தில் காதில் ஓட்டை ஓர் அடையாளமாயிருந்தது. தமிழன் காது குத்தாமல் வாழத் தொடங்கியபின், அவனை அறிவதற்குத் தலையை மோந்து பார்த்தல் வழக்கமாயிருந்தது. தமிழன் நல்லெண்ணெய் வைப்பதில் தவறுவதில்லை.

தமிழனைக் குழந்தைப் பருவமுதல் வளர்த்து வருவதில் முதலில் எண்ணெய்க்கு முக்கிய பங்கு நிலவி வந்தது. குழந்தைகளுக்கு எண்ணெயும் குளிப்பும் முக்கியமானவை என்பது வைத்தியர்கள் துணிபு. ''வைத்தியருக்குக் கொடுப்பதை (எண்ணெய்) வணிகனுக்குக் கொடு'' என்பது பழமொழி. எண்ணெய் பூசி வருவதால் நோயணுகா என்பது அநுபவம்.

எள்நெய் எண்ணெய் என வழங்கவேண்டியிருப்பவும் அது நல்லெண்ணெய் எனச் சிறப்புப் பெற்று வழங்குகிறது. அது நன்மை செய்வதாலேயாம். மற்றெல்லாத் தாவர எண்ணெய்களுக்கும் இல்லாத தனிப்பெரும் குணம் நல்லெண்ணெய்க்கு உண்டு. அது கடுங் குளிர் காலத்திலும் உறையாது. துருவப் பகுதியிலும் உறையாது. அது உறையுங் குணமில்லாத தன்மையால் அது எம்முடம்பின் உள்ளும் நன்மை தருவதால் அதை அதிகமாக உணவிற் சேர்த்துக்கொள்வர்.

முற்காலத்தவர் எள்ளும் பனங்கட்டியும் சேர்த்து எள்ளுப்பாகு செய்து உண்டனர். உளுந்தில் அப்பளஞ் செய்தபோது வேண்டியளவு எள்ளும் கலந்தனர். முறுக்கு முதலிய சிற்றுண்டிகளிலும் எள்ளைச் சேர்த்தனர். பழஞ் சோறு உண்பவர்கள் நீரில் ஊறவிட்ட எள்ளும் கலந்து உண்டனர். கத்தரிக்காய் முதலியவற்றை எண்ணெயில் பொரித்து உண்டனர்.

தமிழ் வேளாளன் எள் விதைப்பதில் தாராளமாக முயற்சி எடுத்துவந்தான். எள்ளோடு தொடர்புடைய தமிழ்ப் பழமொழிகள் ஏராளமாக எழுந்துள்ளதைக் கொண்டு, எள்ளுக்கும் தமிழனுக்கும் உள்ள தொடர்பை நன்கறிந்து கொள்ளலாம்.

1. இளைத்தவன் எள்ளை விதை.
2. இளைத்தவன் ஏழு வருடத்திற்கு எள்ளை விதைத்தல் வேண்டும்.
3. இளைத்தவன் எள்ளு, வலுத்தவன் வாழை.
4. இட்டுக் கெட்டவன் எள்ளு விதை.
5. இளைக்க எள்ளு, கொழுக்கக் கொள்ளு.
6. இளைத்தவன் எள்ளும், பளுத்தவன் கரும்பும்.

எள்ளுக்கு திலம் என்று வடமொழியிலும், நுவுலு என்று தெலுங்கிலும், கருவலா என்று மலையாளத்திலும், எள்ளு என்று கன்னடத்திலும் தில் என்று இந்தியிலும் பெயர்கள் வழங்கும். தாவரவியலில் செசமும் இந்திகும் (Sessamum Indicum) என வழங்குவர். எள்ளில் பலவகையுண்டு. எள் பொதுவாக வெள்ளை, கருமை, செம்மை என மூன்று நிற பேதங்கள் உள்ளது.

எள்ளுச் செடியின் இலையும் மருந்துக்குப் பயன்படுகிறது. இலைகளை மெதுவாக நீரிற் கழுவியபின், குளிர்ந்த நீரிற் கசக்கிக் கழுவினால் ஒரு பசைத்தன்மை நீரிலிறங்கும். அதைக்கொண்டு புண்பட்ட கண்ணைக் கழுவுவார்கள். இலைகளைக் காசாயமாக்கிப் பருகினால் சீதபேதி குணமாகும். எள்ளிலைகளை உடம்பில் உண்டாகும் வலியுள்ள கட்டிகளின் மேற் கட்டினால் அது உடைந்து குணமுண்டாகும்.

எள்ளின் பூவும் கண்ணோய்க்கு மருந்தாகும். எள்ளின் காயையும் சமூலத்தையும் உலர்த்திச் சுட்டுச் சாம்பராக்கிக் கட்டுவதால் கட்டிகள் உடைக்கும்.

### எண்ணெயின் மகிமை

புத்தித் தெளிவு, விழிகளுக்குக் குளிர்ச்சி, உடம்பு பூரித்தல், தேக புஷ்டி, பலம், தேஜஸ் என்பனவற்றை எண்ணெய் தரும் என்பர். இன்னும் கண்ணோய், காது நோய், தலைக்கொதிப்பு, காசநோய், சொறி, சிரங்கு, விரணம் முதலிய நோய்களைப் போக்கும். எண்ணெய் தேய்த்து முழுகுவதால் மனமகிழ்ச்சி, வாலிபத்தன்மை முதலியன உண்டாகும்.

---

**பிறரை வெறுத்து நீண்டகாலம் வாழமுடியாது**

'புத்திநய னக்குளிர்ச்சி பூரிப்பு மெய்ப்புளகஞ்
சத்துவங் காந்தி தனியிளமை — மெத்தவுண்டாங்
கண்ணோய் செவிநோய் கபாலஅழல் காசநோய்
புண்ணோய்போ மெண்ணெய்யாற் போற்று''

உடம்பின் உறுப்புக்களுக்கு எண்ணெய் பூசுவதைப் பற்றி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் அருமையாக விளக்கியுள்ளார். உச்சந்தலைமுதல் உள்ளங்கால்வரை எண்ணெய் பூசுவதால் உடம்புக்கு நன்மையுண்டாகும். கண்ணொளி அதிகரிக்கும், சூடு தணியும் என்றெல்லாம் விளக்கியுள்ளார். இன்ன இடத்தில் எண்ணெய் பூசுவதால் இன்ன உறுப்பு வலுவடையும் என்றெல்லாம் கூறுவர்.

நாள்தோறும் இரண்டு கரண்டி சுத்தமான நல்லெண்ணெய் உட்கொண்டு வருவதால் சொறி சிரங்கு நீங்கி தோல் மிருதுத்தன்மையடையும். இருமல் தணியும்.

இதுகாறும் கூறியவை தமிழருக்கு முன்னமே நன்கு தெரியும். தமிழ்க் கமக்காரர் நுட்ப புத்தியும் விடா முயற்சியும் கடின உழைப்பும் மிக்கவர். எள் வரண்ட பகுதிக்குரிய தானியம். தமிழ்க் கமக்காரர் எள் விளைவு செய்தலை அதிகரித்தால் வெளிநாடுகளுக்கு ஏற்ற வசதிகள் உண்டு. உள்ளூர்த் தேவையை நிறைவு செய்யவாகுதல் இனி வருங் காலத்தில் எள் சாகுபடியை அதிகரிப்போமாக.

எள் புரதச்சத்து நிறைந்த சிறுதானியம் என்பதோடு, எண்ணெய் தலைசிறந்த உணவாவதோடு, அது கைத்தொழில்களில் சவர்க்காரம், வாசனைத் தைலம் முதலியன உற்பத்தி செய்வதற்குச் சிறந்த மூலப்பொருளாகவும், எள்ளுப்பிண்ணாக்கு கால்நடைகளுக்கும் கோழிகளுக்கும் நல்ல தீவனமாகவும் பயன் தருவதாகும்.

இங்ஙனமாகத் தமிழ் நாட்டின் எல்லா மாநிலங்களிலும் இது எல்லோராலும் பெரும்பாலும் மார்கழிப் பட்டமாக உற்பத்தி செய்யப் பெறுகிறது.

## HINDUISM: *Some Sayings*

1. When an action, good or bad, has been committed, its fruit must of necessity eaten.
2. By his own action a man falls or rises.
3. That which you have given in alms will be your safety at the last day.
4. There is no austerity like forgiveness.
5. If you beleive it is a deity, otherwise it is a stone.
6. Benovelence has ruined none in the world.
7. Be eyes to the blind, friend to the friendless, father and mother to all.
8. I met a hundred men on the road to Delhi, and they were all my brothers.
9. Death is the black camel that kneels before every door.
10. Nothing will be deminished by charity.
11. Charity is a plant whose roots are ever green.
12. Contentment is the root of happiness.
13. Cows are auspecious purifiers.
14. The dead is the pilot of the living.
15. Deviation from right is deviation from peace.
16. Man is his own devil.
17. Duty needs no reward.
18. Earth laughs at him who calls a place his own.
19. Enjoyment is the grace of god.
20. Where faith is there god is.
21. Faith keeps the world going.
22. A fat man has no religion.
23. By remembering our own faults we forget anothers.
24. He who has come through the fire will not fade in the sun.
25. Give in this world to get back in the next.
26. Call upon the name of God, and ask for what is good for you.
27. If God is merciful he brakes the roof in giving.
28. God builds the nest of the blind bird.
29. We give to god by grains and take by bushels.
30. God is the help of the helpless.

## உங்களுக்குத் தெரியுமா?

(விடைகள் வேறிடத்தில்)

1. ரூபா நாணயம் வழக்கிலுள்ள நாடுகள்.
2. பவளப் பாறை உண்டாகக் காரணம்.
3. கணவாய் என்னும் மலைப்பாதைகள்.
4. சீனி செய்ய உதவுவன.
5. பூமியில் முதலில் தோன்றியவை.
6. இந்து சமுத்திரத்தில் கலக்கும் ஆபிரிக்க நதி.
7. நீதித் தொகுப்புக்குப் பெயர்போன சொலமனின் நாடு.
8. பூனையினத்து மிருகங்கள்.
9. திராட்சைப் பழ வற்றலின் பெயர்கள்.
10. பழைய கிரேக்க விளையாட்டுகள் 1896இல் மீள நடைபெறுவன.
11. சாதாரண வீட்டுக் கதவின் உயரம்.
12. மறதன் ஓட்டத்தின் தூரம்.
13. மறதன் ஓட்டத் தூரம் அவ்வாறான காரணம்.
14. ஸ்திரிக்கை (அயண்) பிடிக்க அதிகசூடு தேவையான உடை.
15. முட்டை கொண்டு தயாரிக்கும் உணவு.
16. வட்டத்தின் விட்டார்த்தம் இருமடங்கானல்.
17. யேசுக்கிறிஸ்துநாதர் அவதரித்த இடம்.
18. யேசுக்கிறிஸ்துநாதர் வளர்ந்த இடம்.
19. இங்கிலாந்தை முற்காலத்தில் கைப்பற்றியவர்கள்.
20. செயற்கை இழைகள் என்பன.

## விவேக வினாவிடை

1. எல்லா விதைகளிலும் மேலான விதை எது?
உண்மை அறிவு.

2. வாழ்வின் மேலான நிலை யாது?
மற்றவர்களுக்கு உபகரிக்கும் நிலை.

3. துக்கம் துயரம் வருத்தம் என்பனவுக்குக் காரணம் என்ன?
திருப்தியீனம்.

4. ஒருவருக்கு அதிக கேடு விளைவிக்கும் குணம் எது?
அகந்தை.

5. துன்பத்தைப் போக்கச் சுருக்கமான வழி என்ன?
உரிமைகளை நீத்துத் தியாகியாதல்.

6. மரணத்திலும் மோசமானது எது?
அறியாமை.

7. விலைமதிக்க முடியாதது எது?
காலத்தில் செய்த உதவி.

8. உலகத்தை வெல்லக்கூடியவன் யாவன்?
உண்மை, பொறுமை உள்ளவன்.

9. உலகம் நிலைத்துள்ளது யாருக்காக?
உண்மை பேசுபவருக்காக.

10. உண்மை நண்பன் என்பவன் யாவன்?
பாபம் செய்யவிடாமல் தடுப்பவன்.

11. கலக்கமில்லாமல் வாழ்பவர் யாவர்?
பெரியவர்கள் சொற்கேட்டு நடப்பவர்.

12. யாருடைய வீட்டில் செல்வம் தங்காது?
சோம்பேறி வீட்டில்.

13. கண்களிருந்தும் குருடன் என்பவன் யாவன்?
நம்பிக்கை இல்லாதவன்.

14. புத்திசாலி பேசக்கூடாதவை யாவை?
பொய், மற்றவர்களின் குறை.

15. எல்லா நல்லியல்புகளையும் மறைப்பது எது?
பேராசை.

16. பெரிய பகை என்பது எது?
அவா.

17. உயிர்ப்புத்தரும் காற்றிலும் உத்தமமானது எது?
குலதர்மம்.

18. பாதுகாக்கப் பெறவேண்டியவை யாவை?
கற்பு, மானம், மனம்.

19. மனமகிழ்ச்சிக்கு நிலையான காரணம் என்ன?
தர்மச் செயல்.

20. பயன் விளைவிக்கும் மனவியல்புகள் எவை?
நம்பிக்கை, நல்லொழுக்கம்.

### உங்களுக்குத் தெரியுமா? விடைகள்

1. இந்தியா, பாக்கிஸ்தான், வங்காளதேசம், இலங்கை
2. டொலிப்ஸ் என்னும் கடல் வாழ் உயிரினங்கள்.
3. கைபர், கிலிகிளுங்கி, சிப்லன்.
4. கரும்பு, பீற்கிழங்கு, மேப்பிள், பனை, தென்னை, கித்துள். 5. தாவரம். 6. ஜாம்பசி. 7. பாலஸ்தீனம். 8. சிங்கம், புலி, வரிப்புலி, பூமா. 9. கறன்ற, சுல்ரானு, றெய்சின்ஸ். 10. ஒலிம்பிக்விளையாட்டுகள். 11. ஆறரை அடி. 12. இருபத்தாறுமைல் 385 யார். 13. அதென்ஸ் நகரிலிருந்து மறதன் அமைந்த தூரம் அது. 14. லினன் ஆடை. 15. ஓம்லெற். 16. பரப்பு நான்குமடங்காகும். 17. பெத்லகம். 18. நசரத். 19. உரோமர், ஆங்கிலோ சாக்சன்ஸ், டேனியர். 20. நைலோன், றேயோன், றெறிலின், ஓலன், ஹெசியன்.

முற்றொடர்:-

### வழக்கில் உள்ள வடமொழிகள் சில

| | | |
|---|---|---|
| பஞ்ச கிருத்தியம் | — | ஐந்தொழில் |
| பஞ்ச பூதங்கள் | — | ஐந்து பருப்பொருள்கள் |
| பஞ்சமி | — | ஐந்தாம் நாள் |
| பஞ்சேந்திரியம் | — | ஐம்பொறி |
| பஞ்சலோகம் | — | ஐம்பொன் |
| பஞ்சாங்கம் | — | ஐந்துறுப்பு |
| பஞ்சாக்கரம் | — | ஐந்தெழுத்து |
| பஞ்சாயம் | — | நடுவர் ஐவர் |
| படம் | — | ஓவியம் |
| படநம் | — | படித்தல் |
| பட்சணம் | — | தின்பண்டம் |
| பட்சாத்தாபம் | — | இரக்கம் |
| பட்சபாதம் | — | ஒருபக்கம், ஓரம் |
| பட்சம் | — | அன்பு |
| பட்சி | — | பறவை |
| பட்டாபிஷேகம் | — | முடி சூட்டல் |
| பண்டிகை | — | பெருநாள், திருவிழா |
| பண்டிதர் | — | அறிஞர் |
| பதம் | — | சொல் |
| பதவி | — | நிலை |

### கறிமுருங்கை

குழந்தைகளை எடுக்கிப் பாதுகாப்பாக வளர்த்து ஆளாக்கி விடுதல் என்னும் கருத்தமைந்த தாபனம் ரெட்பானு. நோர்வே நாட்டினர் எங்கள் வடமாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவலாகச் செய்கின்ற பெரும்பணியில் வீட்டு வளவுகள், வீதிகள், வயலோரங்கள் எங்கும் பயன்தரும் முருங்கை நட்டு வளம்பெருக்கத் திட்டமிட்டுள்ளார்கள். உங்களிடம் மேலதிகமாகவுள்ள முருக்கந்தடிகளை மில்க்வைற் வான்கள் மூலம் பொது நன்மை கருதி உபகரித்துப் பெருமையடையலாம். முருக்கந்தடிகள் உபகரிக்க விரும்பினுல் எமக்கு அறிவியுங்கள்.

★ ஏக்கம் உள்ளவன் எடுத்த காரியத்தை நிறைவு செய்யான் ★

## மாணிக்கவாசக சுவாமிகள்



சைவசமயத்தவர் நின்றும் கிடந்தும் என்றும் எப்போதும் மனங்கசிந்து பாடுவதற்கமைய இனிமையான பாடல்களைப் பாடியருளியவர் மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் மந்திரியாராவர். பாண்டியருக்கு வழிவழியாக அமாத்திய பிராமணர் மந்திரிமாராயிருந்த மரபில் வந்த திருவாதவூரரும் மந்திரியாராயினர்.

மந்திரியாரான மாணிக்கவாசகனார் சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பெற்று தீட்சை உபதேசம் முதலியன வழங்கப்பெற்று மதுரமான திருவாசகப் பாடல்களைப் பாடியருளும் உணர்ச்சியும் ஊட்டப்பெற்றார். இறையருள் உள்ளே நின்று ஊட்ட ஊட்ட அருள்மயமான திருவாசகப் பாடல்கள் அருவி நீர்போல அவர் வாயிலிருந்து அருமையாக அமைவாகச் சொரிந்தன.

தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமானைச் சுவைத்த மாணிக்கவாசக சுவாமிகள் தாம் கொண்ட சுவையை நாமுண்டு பயன்பெறுமாறு 658 பாடல்களில் பாடியருளியுள்ளார். இவற்றுள் நான்கு பாடல்கள் மிகநீளமானவை. பக்தியென்றால் என்ன என்றறியாத சிலர் மாணிக்கவாசக சுவாமிகளின் பாடல்களைத் தலைசிறந்த இனிய இலக்கியம் எனப் போற்றுவதும் உண்டு.

திருவாசகம் உலகப் புகழ்பெற்ற பக்தி நூல். அதன் இனிமையை மூலத்திலே சுவைப்பதற்காகத் தமிழ்படித்த பிறமொழியாளர் பலர். ஆங்கிலம் முதலிய வேற்று மொழிகளிற் பெயர்க்கப்பெற்ற மொழி பெயர்ப்பைக் கற்றே பக்தி தலைக்கேறியவர் பலர். எல்லோரும் திருவாசகம் படித்திருத்தல் வேண்டும் என்று மதப்பெரியார் ஒருவர் தம் போதகர்களுக்கு ஆலோசனை கூறியுள்ளதாகவும் தெரிகிறது.

திருவாசகத்துக்குப் பல திருநாமங்கள் வழங்குகின்றன. அவை யாவும் அன்பர்கள் அடியார்களால் ஆராமையோடு வழங்கப்பெற்றனவாகும். மதுரவாசகம், மணிவாசகம், வாசகமாலை, வாசகத்தேன் என்பன திருவாசகத்துக்கு வழங்கும் வேறு திருநாமங்களில் ஒரு சில.

திருவாசகத்தை ஒருமுறை ஓதினாலும் கேட்டாலும் கருங்கல் போன்ற கடின மனமும் கசிந்துருகிவிடும் உயிர்த்தன்மை கெட்டுச் சிவத்தன்மை பெறுவதற்கு உருக்கமான பாடல் திருவாசகம். அலைந்து திரிகின்ற மனத்தை ஆண்டு அதனை ஓடித்திரிய விடாமல் ஓயவைப்பது திருவாசகம். வேகம் கெடுத்தாண்ட வேந்தன் என்றே மாணிக்கவாசகர் இறைவனை எடுத்த எடுப்பிற் பாடுகிறார்.

திருவாசகத்தில் பயின்றுவரும் சொற்களின் அமைவால் உண்டாகும் ஒருவகை ஓசைநயம் எவரையும் இறுகப் பிணித்து விழுமிய பொருளை விளக்குகின்றது. அதன் இனிமையைத் தேன் என்றும் கற்கண்டு என்றும் பெரும் பக்திமான்கள் போற்றியுள்ளார்கள்.

தமிழ்நாட்டிலும் வட இலங்கையிலும் வாழும் சைவ சமயத்தவர் திருவாசகத்தை எவ்வாறு போற்றிப் படிக்கிறார்கள், சைவம் எவ்வளவு சிறந்த சமயம் என்றெல்லாம் கிறிஸ்தவ மதப் போதகராக வந்த வெளிநாட்டு நல்லறிஞர் ஜி. யு. போப் என்னும் பெருந்தகையார் போற்றியுள்ளார். திருவாசகம் தமிழனுடைய உதட்டில் ஒட்டியுலாவும் சிறப்பினை அவர் பாராட்டியுள்ளார்.

"Saivism is the real religion of the South of India, and of North Ceylon; and the Saiva Siddhanta philosophy has deserves to have, far more influence than any other. The poems are recited daily in all the great Saiva temples of South india, are on every one's lips.

திருவாசகத்துக்கு உருகாதவர் ஒரு வாசகத்துக்கும் உருகார். திருவாசகம் சிவபெருமானின் பழமையைக் கூறும். இறைவன் ஆன்மாக்கள் மீது கொண்ட பெருங் கருணையைக் கூறும். இறைவனின் தூல சூக்குமத் தன்மையைக் கூறும். உலகத்தை உள்ளிட்ட இந்தப் பெரிய அண்டத்தின் உற்பத்தி, நிலைபேறு, அழிவு முதலியவற்றைக் கூறும். இறைவனிடத்து ஆன்மாக்கள் பக்திகொள்ளும் முறை, உலகப்பற்றை விடுத்து இறையனுபவம் பெறும் முறை முதலியனவற்றைக் கூறும்.

## பஞ்சபுராணங்களில் ஒன்று

திருக்கோயில்களில் பூசைமுடிவில் திராவிடவேதம் அருளிப்பாடுக என்று குருக்கள் ஐயா அவர்கள் கூறியதும், ஓதுவா மூர்த்திகள் திருச்சிற்றம்பலம் என்று சொல்லிப் பஞ்சபுராணம் பண்ணோடு பக்தியாகி ஓதுவார்கள். பஞ்சபுராணம் என்பன தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம் என்பனவாம். இவ்வாறாயின் 8259 பாசுரங்களடங்கிய தேவாரங்களில் ஒன்றும், 656 பாசுரங்களடங்கிய திருவாசகத்தில் ஒன்றும், 288 பாடல்களடங்கிய திருவிசைப்பாவில் ஒன்றும், 13 பாடல்கள் கொண்ட திருப்பல்லாண்டில் ஒன்றும் 4286 செய்யுள்கள் கொண்ட பெரியபுராணத்தில் ஒன்றுமாக ஐந்து பாடல்கள் ஓதுகின்றார். பாடல் தொகையில் மிகவும் குறைந்த திருப்பல்லாண்டு வேறு பெரிய திருமுறைகளோடு மதிப்புப்பெற்று நிலவுகின்றது. அன்றி ஒன்பதாம் திருமுறையில் இரண்டு பாடல்கள் பாடப் பெறுவது அதற்குரிய பெருஞ்சிறப்பாகும்.

## குளங்களை ஆழமாக்குதல்

எங்கள் சுற்றாடலில் உள்ள குளங்களை அவசியம் ஆழமாக்கி அதிக நீரைத் தேக்கிவைத்தால் பெரும் பயன் உண்டாகும். நீங்கள் சிரமதானமூலம் குளங்களை ஆழமாக்குவதானால், நாம் உங்களுக்கு வேண்டிய மண்வெட்டிகள், தாச்சிச்சட்டிகள் இரவல் தந்து ஒத்துதவி புரிவோம். சமூகசேவை செய்வதற்கு முன்வருவீர்களாக.

## வேப்பம் விதைகள்

மில்க்வைற் தொழிலகத்திற்கு வேப்பம் விதைகள் பெருமளவில் தேவை. சிறு அளவாகவும் பெருமளவாகவும் விநியோகஞ் செய்பவர்களுக்கு நல்ல விலைகொடுத்து வாங்குவோம்.

★ சுயநலம் கருதாத சேவை ஆற்றலை வளர்க்கும் ★

முற்றொடர்:

## தமிழில் வழங்கும் ஆங்கிலச் சொற்கள்

19. இன்ரேவல் — Interval
20. எலக்ரிக் — Electric
21. எலெக்சன் — Election
22. எனமல் — Enamel
23. என்ஜின் — Engine
24. ஏக்கர் — Acre
25. ஏஜென்ட் — Agent
26. ஏரோபிளேன் — Aeroplane
27. ஐஸ் — Ice
28. வயர் — Wire
29. வைன் — Wine
30. ஹொட்டல் — Hotel
31. கமிஷனர் — Commissioner
32. கொமிற்றி — Committee
33. கம்பவுண்டர் — Compounder
34. கொம்பசிற்றர் — Compositor
35. கொம்பாஸ் — Compass
36. கறன்ட் — Current

முற்றொடர்:

## சைவத் தமிழ்ச் சொற்கள்

21. சிற்சத்தி — ஞானசத்தி, அருட்சத்தி
22. செநறி — பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்குஞ் சக்தி
23. தற்போதம் — ஆன்ம முனைப்பு
24. பதமுத்தி — சாலோகம், சாமீபம், சாரூபம்
25. பதிஞானம் — திருவருள், சிவஞானம்
26. பரமுத்தி — மிக மேலான முத்தி, சாயுச்சியம்
27. பரிக்கிரக சக்தி — தொழிற்குக் காரணமாயுள்ள சக்தி
28. பரிபக்குவம் — உத்தமமான பக்குவம்
29. பஞ்சராத்திரி — விஷ்ணுவே கருத்தா என்பவர்
30. பிரணவம் — வேதங்களில் முதலிற் சொல்லும் மந்திரம்
31. பிரதிட்டை — நிலைபெறுத்துதல்
32. பிரளயாகலர் — இரு மலத்தார் - ஆணவம் கன்மம்
33. பிராயச்சித்தம் — அவதானித்துச் செய்யும் சுத்தக் கிரியை
34. பிரேரித்தல் — காரியப்படுத்துதல், ஏவுதல்
35. பெத்தநிலை — ஆன்மாக்கள் பாசத்தாற் கட்டுப் பட்ட நிலை
36. மந்திரம் — நினைத்தவனைக் காப்பாற்றுவது
37. மீமாஞ்சை — வைதிக நூல்களில் ஒன்று
38. மெய்ஞ்ஞானம் — வீடு பயக்கும் உணர்வு
39. விஞ்ஞானகலர் — ஒரு மலத்தார், ஆணவம்
40. வேதம் — அறிதற்குக் கருவி

## தருக்கம் என்னும் அளவை

சமய நூற்பொருளை ஐயந்திரிபற அறிந்து தெளிவதற்கு அளவை என்னும் தருக்க நூலறிவும் அவசியமானது. அக்காலத்தில் ஏரணம் என வழங்கிய தருக்க நூல்கள் தமிழில் இருந்தன என்பர். அவை யாவும் காலப்போக்கில் கடலாலும் கறையானாலும் அழிந்தபின்னர், தமிழ்நாட்டில் வழக்கில் வந்தவை வடமொழியில் எழுந்த தருக்க நூல்களாகும். அவைபற்றிய விபரம் மணிமேகலை, வளையாபதி முதலிய பெருங் காப்பியங்களிலும், நீல்கேசி என்னும் சிறு காப்பியத்திலும் வந்துள்ளன. அவற்றைத் தருக்கைக் கோவை என வழங்குவர்.

வடமொழியில் தருக்கநூல் செய்தார் கௌதமர், கணாதர் என்பவராவர். முன்னவர் செய்தது கௌதமீயம் எனவும் மற்றவர் செய்தது கணாதம் எனவும் வழங்குவன. இவர்களுக்குப் பின்வந்த தருக்கநூலாசிரியர்களுக்கு இவ்விரு நூல்களுமே வழிகாட்டிகளாயிருந்தன.

இங்ஙனமாக ஆந்திர நாட்டினரான அன்னம்பட்டர் என்பார் தம் பெயரால் இயற்றியவை தருக்க சங்கிரகம் என்னும் நூலும் அதன் உரையாகிய தருக்க சங்கிரக தீபிகையுமாகும். தருக்க சங்கிரக தீபிகையை அன்னம் பட்டீயம் என வழங்குவர். இது முந்நூற்றைம்பது கிரந்தங்களையுடையது.

இவ்விரு நூல்களையும் துறைபோகக் கற்றுணர்ந்த திருவாவடுதுறையாதீனத்துச் சிவஞானமுனிவர், இவற்றைத் தமிழில் வசனநடையில் மொழிபெயர்த்தார்.

இங்ஙனம் மொழிபெயர்க்கப்பெற்ற இந்நூல்கள், திருவாவடுதுறையாதீனத்தில் ஏட்டுருவில் இருந்த காலத்தில் இவற்றைப் பிழையறப் பரிசோதித்து அச்சேற்றக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களே எனக் கண்ட இராமநாதபுரத்துச் சமஸ்தானம் பொன்னுச்சாமி தேவர் அவர்கள், இப்பணியை அவர் மேலதாக்கினர். தருக்கம் கைவந்த நாவலரவர்கள் அவற்றைத் தமது வித்தியானுபாலன யந்திரசாலையில் 1861ஆம் ஆண்டில் அச்சேற்றிப் புத்தகவுருவாக்கியபோது, திரிசிரபுரத்து வித்துவானாகிய மீனாட்சிசுந்தரம்பிள்ளை என்பாரும், அவர்தம் மாணாக்கரும் சிதம்பரஞ் செட்டியார் குமாரருமான தியாகராசச் செட்டியாரும் நாவலர் அவர்களைப் புகழ்ந்து சிறப்புப் பாயிரங்கள் வழங்கியுள்ளார்கள்.

நாவலர் அவர்கள் இதற்கு முன்னரே தம் பொறுப்பில் சூடாமணி நிகண்டுரை, சௌந்தரியலகரியுரை, நன்னூல் விருத்தியுரை, திருச்செந்தினிரோட்டகயமக வந்தாதியுரை, திருமுருகாற்றுப்படையுரை, சிவாலய தரிசன விதி, பெரியபுராண வசனம், சைவ தூஷண பரிகாரம், திருவாசகம் திருக்கோவையார், திருக்கோவையார் பழையவுரை, திருக்குறள் பரிமேலழகர் உரை முதலிய நூல்களைப் பிழையறப் பதித்துத் தேசமெலாம் பெரும் புகழ் பெற்றிருந்தார்.

நாவலர் அவர்களிடம் முறையாகத் தருக்கம் பயின்ற மாணவர் பலர் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் அதனைக் கற்பித்து வந்தார்கள். நாவலரவர்களின் மருகரும் மாணாக்கருமான வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்

★ பேராசை மனிதனின் புனிதத்தைப் பாழ்படுத்துகிறது ★

கள் தருக்கம் கற்பிப்பதில் திறமை பெற்றிருந்தார். அவர்தம் மாணவர் பலருள் திருஞானசம்பந்தபிள்ளை என்னும் தம்பு தருக்ககோடரி தாலுதாரி எனப் பெருஞ் சிறப்புற்றிருந்தார். வித்துவ சிரோமணி வாய்க் கேட்டவர் எழுதிய விளக்கக் குறிப்புக்கள், அவர் வழிவந்த இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் மூலம் பண்டிதர்கள் பலருக்குப் பெரும் பயனளித்தன. அவை அவர் வழி வந்த மாணவர் சிலரிடம் கையெழுத்துப் பிரதிகளாய் உள்ளன.

இவை இவ்வாறாக இற்றைக்கு எண்பதாண்டுகளுக்கு முன் பின்னாகத் தமிழ்நாட்டில் தந்தை மங்கலம் என்னும் இடத்தைச் சேர்ந்த நல்லதம்பிப்பிள்ளை என்பார், தருக்க சங்கிரகத்தைச் செய்யுள் உருவிற் பாடியதோடு அதற்குப் பொருளும் எடுத்துக்காட்டும் எழுதியுள்ளார்.

## நலம்பெறவுரைக்கும் நற்றமிழ்ச் சொற்கள்

[பலர் முன்னிலையில் சொல்லத்தகாத வார்த்தைகளை நலம்பெற உரைக்கும் நற்றமிழ் வழக்கு]

1. அரை மூடி — சிறுமியர் அணியும் ஆபரணம்
2. கால் கழுவுதல் — சௌஷஞ் செய்தல்
3. கொல்லைக்குச் சென்றான் — மலங்கழிக்கச் சென்றான்
4. கோமயந் தெளித்தாள் — சாணி தெளித்தாள்
5. சிறுநீர் கழித்தான் — ஒன்றுக்குப் போனான்
6. நரகலை மிதித்தான் — மலத்தை மிதித்தான்
7. உச்சிட்டம் — உண்ட எச்சில்
8. உமிழ் நீர் — எச்சில்
9. சூதம் கடுக்கிறது — மலவாயில் நோகிறது
10. அவள் வீட்டுக்குத் தூரம் — அவள் தீட்டானாள்
11. அவள் பூப்படைந்தாள் — அவள் பருவமானாள்
12. அவள் தலைமுழுகவில்லை — அவள் கர்ப்பவதியானாள்
13. அவள் புத்தியடைந்தாள் — அவள் பருவமானாள்
14. பாதரட்சை — செருப்பு
15. பிறந்த மேனியன் — நிர்வாண கோலம்
16. வாய் பூசுதல் — வாய் கொப்புளித்தல்

## மரம் நாட்டும் சம்பிரதாய வழக்கம்

யாழ்ப்பாண மாவட்டத்து சாவகச்சேரித் தொகுதியில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராசா அவர்கள் மேற்பார்வையில், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு. க. சிவானந்தமூர்த்தி அவர்கள் முயற்சியால் நடாத்தப்பெற்ற மூன்று நாள் விழாவில் கலந்துகொண்ட மில்க்வைற் தொழிலதிபர் உரையாற்றும்போது, ''எந்த விழாவையும் நாம் மங்கலகரமாக ஆரம்பிக்கும்போது முதலில் எதிர்காலத்திற்குப் பயன்தரும் வகையில் மரங்களை நாட்டும் சம்பிரதாய வழக்கத்தை மேற்கொள்ளுதல் வேண்டும்'' என்று பணிவன்புடன் வற்புறுத்திப் பேசியதோடு மரக்கன்றுகளையும் உபகரித்து நாட்டினார். அன்பர்கள் எந்த வைபவத்திற்கும் அவரிடம் நிழல்தரு மரங்களை இலவசமாகப் பெற்றுப் பயன் செய்துகொள்ளலாம்.

## நிறைந்த சேவையும் நீடித்த வாழ்வும்

அப்பர் அடிகளை நினைவூட்டும் வகையில் எம் காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியாருக்கு எண்பத்தேழாம் பிறந்த நாள் விழா 8-6-82 வைகாசி மூல நாளில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

அகத்தியர் தேவாரத் திரட்டுக்கு அகலவுரை எழுதிய சைவப் பெரியார் கயப்பாக்கம் சதாசிவ செட்டியாரின் குடும்பத்தைச் சேர்ந்த சோமசுந்தரஞ் செட்டியாருக்குத் திருமுறைகளில் ஈடுபாடு அதிகம்.

இவரின் ஈடுபாட்டின் பயனாக எமக்குக் கிடைத்த படைப்பு, திரட்டு ''பயன் தரும் திருமுறைப் பதிகங்கள்'' என்னும் திருமுறைத் தொகுப்பாகும். வேண்டுவார் வேண்டியாங்கு வேண்டத்தக்கனவற்றை விரும்பிப் பாடிப் பயன்பெறுவதற்கு வாய்ப்பாக வரப்பிரசாதமாக வெளிவந்த இத் தொகுப்பினை உளமாரப் பாராட்டி வரவேற்கின்றோம்.

## யாழ்ப்பாணத்தார் நாகரிகம்

யாழ்ப்பாணத்தாரின் நாகரிகப் பழைமை சேர சோழ பாண்டி நாடுகளின் நாகரிகப் பாரம்பரியமாகும். நாகரிக பாரம்பரியத்தில் வந்த தமிழர், இன்றைய யப்பானியர், சுவிற்சர்லாந்து வாசிகள், ஸ்கொத்துலாந்து மக்கள் ஆகியோரின் உழைப்பினை ஒருங்கே கடைப்பிடிப்பவர்களாவர்.

இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பின்னாக யாழ்ப்பாணத்து வீதிகள், ஒழுங்கைகள் முடக்குகளில் குப்பைகள் சருகுக்குவியல்கள் கஞ்சல்கள் சாம்பர் குவியல்கள் என்பனவற்றைக் காணமுடியாது. குப்பையிலே கோடி பொன் எனக்கருதிய யாழ்ப்பாணத்தார் அவற்றை வளவுகளில் குவித்து வைத்தும் குழிகளில் இட்டுவைத்தும் தங்கள் வயல்களுக்குப் பயன்படுத்தியும் பிறருக்கு விற்றும் பொருளீட்டினர்.


இன்று அடுப்புச்சாம்பல், என்னத்தையோ துடைத்த தென்னம் பொச்சு எல்லாம் தெருவீதிகளில் குவிந்து கிடக்கின்றன. இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால் இப்பக்கத்தில் வாழ்பவர் மறுபக்கத்திலும், மறுபக்கத்தில் வாழ்பவர் இப்பக்கத்திலும் குப்பை குவிக்கிறார்கள்.

''இது உங்கள் நகரம் இதைத் துப்புரவாக வைத்திருங்கள்'' என்று மாநகர சபையார் பேசியும் பிரசாரஞ் செய்தும் துலாம்பரமாக எழுதியும் அறிவுறுத்த அறிந்தும் நாம் பகுத்தறிவில்லாமல் நகரத்தை நரகமாக்குகின்றோம்.

உலகெங்குமிருந்து உல்லாசப் பிரயாணிகள் எங்கள் நாட்டைப் பார்த்துப்போக வருகிறார்கள். அவர்கள் எங்களைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்பதைச் சற்று யோசித்து நாம் நடக்கவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாகச் சுகாதார மில்லாத சூழலில் நம் குழந்தைகளை வளர்ப்பதும் விளையாட விடுவதும் தீமை பயக்கும்.

போனது போகட்டும் இனிமேலாவது நாம் குப்பை கூளங்களைக் கூட்டுப் பசளை தயாரித்தல், வளவுகளில் மரங்களினடியில் புதைத்தல் முதலிய முறைகளில் பயன்படுத்தி நல்வாழ்வு வாழ்வோமாக.

★ சிந்தையும் செயலும் ஒன்றுபடுதல் நல் வாழ்வாகும் ★



## யோகாசன நிபுணர் கிருஷ்ணன்

பிரமச்சாரி தி. ஆ. கிருஷ்ணன் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தோடு தொடர்புடையவர் - யோகாசன ஆசிரியர்.

உலக இந்து மாநாட்டுக்குப் பேராளராக வந்த இவர், யாழ்ப்பாணத்தில் மில்க்வைற் தொழிலகத்திற்கு வருகை புரிந்து சில நாள்கள் தங்கியிருந்து செங்குந்தா இந்துக் கல்லூரி, முத்துத்தம்பி வித்தியாசாலை, கனகரத்தினம் மகா வித்தியாலயம், கன்னியர்மடம் முதலிய பல பாடசாலைகளில் யோகாசனங்கள் செய்து காட்டியதோடு உடனுக்குடன் விளக்கமும் கூறியவர். இவர் காலமறிந்து வந்து சேவைசெய்து மீண்டதையிட்டு நாம் பாராட்டும்போது, இவர் மில்க்வைற் தொழிலதிபரின் தொண்டுகளைச் சடையப்ப வள்ளலின் சேவையோடு உவமைகூறி வாழ்த்தினர். இவர் மீண்டும் வந்து சேவை செய்வார் என எதிர்பார்க்கிறோம்.


**மில்க்வைற் செய்தி**

மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள்.
நாங்கள் தபாற்செலவு கட்டி செய்தியை அனுப்புவோம்.

நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2
சலவைப் பவுடர் மேலுறை 2.

மில்க்வைற் த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


## ஆனி உத்தரமும் அதன் மகத்துவமும்

மார்கழி மாதத்துத் திருவாதிரை நாளில் அதிகாலையில் சிவபெருமானுக்கு அபிடேகமாதியன விமரிசையாகச் செய்து தரிசித்து வணங்க அருள்பாலிக்கப் பெறுதல் போல ஆனி உத்தர நட்சத்திர நாளிலும் அவரை வணங்கித் திருவருள் பாலிக்கப்பெறுதல் சைவாகமங்களிற் கண்ட வழிபாட்டு முறையாகும்.

ஆலய வழிபாட்டில் அபிடேகம் அருச்சனையாதியன அடியார் மனத்தை நைவிக்கச் செய்து ஆண்டவனிடத்தில் பக்தி பூர்வமாகப் பற்று வளரச் செய்வதற்குப் பெருஞ் சாதனமாகும். ''ஆலயந் தொழுவது சாலவு நன்று'' என்று எளிமையாக ஔவையார் கூறிய அறிவுரையைத் தேவாரமாகிய திருமுறைகளும், சிவஞான போதமாகிய சித்தாந்த சாத்திரங்களும் பெருமளவில் வற்புறுத்தியுள்ளன. ஆலயந்தானும் அரனெனத் தொழுமே என்பது சிவஞானபோதத்தின் முடிந்த முடிபான கோட்பாட்டுக் குறிக்கோளுரையாகும்.

சிவபெருமானைத் தினமும் ஆறு வேளைகளில் ஆராதித்து வழிபடும் ஆகம முறைகள், ஒருபுறமாக விருப்ப, அவருக்கு ஆண்டுதோறும் ஆறுமுறை நடத்தப் பெறுவனவாய அபிடேக ஆராதனையாதியன சிறப்பு விழாக்கள் எனவுள்ளன.

மார்கழி மாதத்தில் வருகின்ற திருவாதிரை நாளும் மாசி மாதத்தில் வருகின்ற சதுர்த்தசி திதியும், சித்திரை மாதத்துத் திருவோண நாளும், ஆனி மாதத்து உத்தர நட்சத்திர நாளும், ஆவணி மாதத்து சதுர்த்தசி திதியும், புரட்டாதி மாதத்துச் சதுர்த்தியும் சிவபெருமானுக்குச் சிறப்பான அபிடேகமாதியனவுக்கு விதிக்கப் பெற்ற நாள்களாகும்.

நாங்கள் நாள்தோறும் வைகறை, காலை, உச்சிக் காலம், மாலைவேளை, இரவு, அர்த்தசாமம் என்னும் ஆறுகாலப் பூசைகளைக் கண்டு உய்திபெறுமளவில் ஆண்டுதோறும் அவ்வக்கால வேளைகளில் நடைபெற வேண்டியனவாய அபிடேக தினங்களே திருவாதிரை முதலாகச் சொல்லப் பெற்றனவாகும்.

இந்தவகையில் மார்கழித் திருவாதிரை வைகறைக்கு அமைவாகவும், மாசி காலைப் பூசைக்கு அமைவாகவும், சித்திரை உச்சிக் காலமாகவும், ஆனி மாலைப் பூசையாகவும், ஆவணி இராவேளைப் பூசையாகவும், புரட்டாதி அர்த்தசாமப் பூசையாகவும் அமையும் என்பர்.

சிதம்பரம் உலகத்துக்கே இருதயத்தானமாகையால் அங்கே சிவகாமியம்மை சமேத நடராசப்பெருமான், மார்கழி மாதத்து ஆதிரை நாளன்று எழுந்தருளி ஆடல் புரிந்து ஆட்கொள்ளும் வகையில் ஆனி உத்தர நாளிலும் அவர் ஆடல் புரிந்து எழுந்தருளி வந்து ஆட்கொள்ளுகின்றார். நாம் ஆள்பட்டு உய்திபெறுவோமாக. ஆலய தரிசனம் தவறாமற் செய்வோமாக.

★ பணிவிடை செய்தால் கடவுள் கிருபை கிடைக்கும் ★

## திருப்பல்லாண்டு பெற்ற தனிப்பெருமை

காலங்கடந்தவர், ஆதியும் அந்தமும் இல்லாதவர், ஆன்மாக்களை ஆட்கொண்டருளுபவர் இறைவன். இறைவனைப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துதல் தாம் வாழ்வதற்கேயாம். பாடுவார் பணிவார் பல்லாண்டிசை கூறு பத்தர்கள் என்பது வழிபாடு செய்வார் இலக்கணம்.

சிதம்பரத்தில் தேரோட்டம் தடைப்பட்டபோது பாடப்பெற்ற திருப்பல்லாண்டுப் பதிகம் தேரை ஓடச் செய்தது. இப்பதிகத்தில் சிவபெருமானின் அருட் செயல்கள் பல கூறப்பட்டுள்ளன. திருமாலுக்குச் சக்கரம் அளித்தமை, உபமன்னியு முனிக்குழந்தைக்குப் பாற்கடலை ஈந்தமை, சண்டேசுவரருக்குப் பரிசுகள் கொடுத்தமை, முதலியன குறிப்பிடத்தக்கவையாகும்.

சிதம்பரத்துத் திருவாதிரை உற்சவநாளில் தேரேறிய சிவனைக்கண்டு தொழ வந்தவர்கள் யாவர் எனவினவி, அவர்களுள்ளே திருமால், பிரமன், அக்கினி, சூரியன், இந்திரன் முதலிய தேவாதி தேவர்களும் நெருக்கமாக நின்றனர் எனப்பாடியுள்ளார்.

இத்தகைய திருப்பல்லாண்டு தூர கிழக்கு நாடுகளான தாய்லாந்து கம்போடியா முதலிய தேசங்களில் மன்னர் முடிசூட்டு வைபவங்களில் பாடப்பெற்றுவந்தமையை பல்லாண்டு பாடுதல் என வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

## பிரார்த்தனைப் பீடப்பட அங்குரார்ப்பணம்

யா/கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தில் 1-6-82 செவ்வாய்க்கிழமை இந்து மாணவர் கழகம் நடாத்திய பிரார்த்தனைப் பீடப்பட அங்குரார்ப்பண வைபவத்தில் மில்க்வைற் சோப் தொழிலதிபர் திரு. க. கனகராசா சமாதான நீதிபதி அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து பிரார்த்தனைப் பீடத்தில் கல்வித் தெய்வம் சரஸ்வதி தேவியின் படத்தைக் கிளிநொச்சிக் குருகுல இந்து போதகர் பயிற்சி மாணவர்களின் கிரியையைத் தொடர்ந்து பிரதிஷ்டை செய்துவைத்தார்.

இந்து மாணவர் கழகத் தலைவர் திரு. செ. நடராசா தலைமையில் திரு. க. கனகராசா அவர்களின் ஆசியுரையை அடுத்து மில்க்வைற் செய்தி ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் அவர்களின் கருத்துரையும் திருமதி செ. சோமசேகரம்பிள்ளையின் நன்றியுரையும் இடம்பெற்றன. பின்னர் மில்க்வைற் சோப் தொழிலதிபரும் கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரியும் மலைவேம்பை நாட்டினர்.

தகவல்: இந்துமாமன்றத் தலைவர்

ஒருவன் தான் சத்தியாக்கிரகி எனக் காண்பித்துக் கொள்வதால் அவன் சத்தியாக்கிரகியாகான். தூய்மையான சத்தியத்தைச் சாதிப்பதாலேதான் அவன் சத்தியாக்கிரகியாவான்.

— மகாத்மா காந்தி


மில்க்வைற் ஆதரவாளர்கள்
நயனும் பயனும் கருதி
வி. எம். கே. அடையாளமிடப்பட்ட
சிறிய பார் சோப்
தூய்மைக்கு உத்தரவாதமுள்ளது.
துண்டு துண்டுகளாகவும்
வெட்டிப் பாவிக்கலாம்.
நிரம்பிய ஆதாய முள்ளது
எங்கும் கிடைக்கும்
வாங்கி ஆதரவளியுங்கள்.




மில்க்வைற் பார் சோப்


முத்திரை....
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் துரைசுவாமி ஒற்றுமைப் பாலம் அமைத்துத் தெற்கு நோக்கிச் சென்றார். இருவரும் சந்திக்கும் பொன்னாள் உதயமாவதை எண்ணிப் பத்திரிகைகள் மகிழ்ச்சி தெரிவித்தன.

சபாநாயகரான துரைசாமி ஆரும் ஜோர்ச் மன்னரின் முடிசூட்டு விழாவுக்குச் சென்ற இலங்கைப் பேராளர் குழுவுக்குத் தலைவராயிருந்து, முடிசூட்டு விழாவில் மன்னரால் நேரில் நைற்பட்டம் அளிக்கப் பெற்று சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி என மதிப்புப் பெற்றார்.

கொழும்புத்துறை சுவாமி என்னும் சிவயோக சுவாமிகளின் பிரதம சீடர்களுள் ஒருவராக நெருங்கிப் பழகிய சேர். துரைசுவாமி அவர்கள் எங்கும் சிவம், எல்லாம் சிவம் என்று சிவமயம் கண்ட சீரியராவர். சட்டசபையில் 1924ஆம் ஆண்டிலும், அரசாங்க சபையில் 1936 ஆம் ஆண்டிலும் போட்டியின்றித் தெரியப் பெற்ற பெருமை பெற்ற துரைசுவாமிப் பெரியாரின் நினைவாக 14-6-1982ல் 10,00000 முத்திரைகள் வெளிவரும் என அறியக்கிடக்கிறது. வாழ்க அவர் புகழ்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள் கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம். 1-6-82.